| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **08/02/2023** | முதல் | **12/02/2023** |
| | அறிக்கை எண் : | **011/ 2023** | வெளியீட்டு நாள் : | **07/02/2023** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 26°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°-24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (02.02.2023 முதல் 06.02.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 12-02-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **02/02** | **03/02** | **04/02** | **05/02** | **06/02** | தேதி | நாள்-5<br>**08/02** | நாள்-5<br>**09/02** | நாள்-5<br>**10/02** | நாள்-4<br>**11/02** | நாள்-5<br>**12/02** |
| 0.0 | 5.7 | 7.5 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 26 | 31 | 30 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 33 | 34 | 34 |
| 24 | 22 | 23 | 21 | 18 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 18 | 19 | 20 | 20 | 20 |
| 8 | 7 | 7 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 3 | 3 | 2 | 2 |
| 86 | 83 | 77 | 80 | 74 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 80 | 80 | 70 |
| 88 | 70 | 75 | 33 | 45 | | 30 | 30 | 30 | 20 | 20 |
| 7 | 6 | 8 | 9 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 8 | 8 | 10 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

**குறுஞ்செய்தி** :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 33°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 18°-20° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 10 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**அடுத்த இரு வாரத்திற்கான நீட்டி விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (10- 16 பிப் 2023):**

**மழைப்பொழிவு :**

10-02-2023 - 16-02-2023: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவான மழை பெய்ய வாய்ப்பு.

**அதிகபட்ச வெப்பநிலை :**

10-02-2023 - 16-02-2023:

மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே இருக்கும் .30°செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச வெப்பநிலை :

10-02-2023 - 16-02-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பானது முதல் இயல்பை விட கூடுதலாக. 14° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலேயே நிலவுவதால் மக்காசோளம் மற்றும் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அறுவடை பணிகளுக்கு திட்டமிடலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : கொய்யா, நிலக்கடலை, கால்நடை.

கொய்யா:

- கொய்யா பயிரில் சுருள் வெள்ளை ஈ கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 12 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அட்டைகளை வைக்கவும்.

நிலக்கடலை:

- நிலக்கடலை பயிரில் காய்புழு கட்டுப்படுத்த ஒரு எக்டேர்க்கு ஐந்து இனக்கவர்ச்சிப்பொறி வீதம் அமைத்து ஆண் அந்துப் பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம்.
- ஒரு எக்டேர்க்கு 1 லட்சம் முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரம்மா கைலானிஸ் வீதம் நடவு செய்த 40 நாட்களுக்கு பிறகு வெளியிட்டு காய்த்துளைப்பானை கட்டுப்படுத்தலாம்.

கால்நடை:

- தை , மாசி மற்றும் பங்குனி மாதங்களில் நீர் நிர்லைகள் உள்ள பகுதிகளுக்கு மேயச் செல்லும் ஆடு மாடுகளுக்கு (குறிப்பாக இளம் கால்நடைகள்) நத்தைகள் மூலம் பரவும் தட்டைப்புழுக்களின் தாக்கம் காணப்படும்.
- பாதிக்கப்பட்ட கால்நடைகளில் கழிச்சல், இரத்த சோகை , கீழ்த்தாடை வீக்கம், அடிக்கடி தண்ணீர் குடித்தல் மற்றும் மாடுகளில் வயிறு உப்புசம் போன்ற அறிகுறிகள் காணப்படும்.
- தட்டைப்புழுக்களின் தாக்கத்தை கண்டறிய சாணப் பரிசோதனை செய்து, கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி குடற்புழு நீக்கம் செய்யலாம்.
- மேலும் இப்புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த கால்நடைகளை நீர் நிலைகளுள்ள பகுதிகளுக்கு மேய்ச்சச்லுக்கு அனுப்பக்கூடாது.